KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 1, No. 01 (2016) 1

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts01012016.01

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

கவி கா.மு. ஷெரீபின் விபீஷணன் வெளியேற்றம் : ஓர் இலக்கிய மறுவாசிப்பு

A Literary Re - reading of Poet Ka.Mu. Sheriff's Vibhishana Veliyetram

Dr. U. Alibava[1,*]

[1] Professor & Head Department of Tamil Studies Bharathidasan University Tiruchirappalli - 620 024
***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 10 January 2016
Revised: 15 January 2016
Accepted: 18 January 2016
Published: 01 February 2016

Article ID
KIJTS-2016-0016

Peer review
Double-blind peer review

Keywords
Ka.Mu. Sheriff
Vibhishana Veliyetram
Kambaramayanam
Vibhishana
Ravana
Righteousness
Literary Criticism
Good Governance
Ethics.

ABSTRACT

This research article examines Vibhishana Veliyetram, a critical literary work by Poet Ka. Mu. Sheriff, based on the Manthira Padalam of Kambaramayanam. The study explores the ethical, political, psychological, and literary dimensions of the characters Vibhishana, Ravana, Kumbhakarna, and Indrajith. It particularly analyses Vibhishana's commitment to righteousness, his opposition to Ravana's unjust actions, and his decision to leave Lanka when his ethical principles are rejected. The article highlights the contrast between Vibhishana's moral consciousness and Ravana's arrogance, as well as Kumbhakarna's dilemma between familial loyalty and moral responsibility. Through selected verses from Kambaramayanam and their interpretations by Ka. Mu. Sheriff, the study examines themes such as good governance, freedom of expression, justice, political wisdom, respect for women, and the consequences of unrighteous conduct. It also brings out the distinctive critical approach of Ka. Mu. Sheriff, particularly his integration of poetic references, character analysis, historical comparisons, and reflective questioning. The study concludes that Vibhishana Veliyetram is not merely an interpretation of an episode from the Ramayana but also a significant literary work that communicates enduring human values. It emphasizes that righteousness is greater than relationships, justice is greater than authority, and wisdom is greater than arrogance.

How to cite this article: Dr. U. Alibava (2016). கவி கா.மு. ஷெரீபின் விபீஷணன் வெளியேற்றம் : ஓர் இலக்கிய மறுவாசிப்பு. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *1*(01), 1–10.
https://doi.org/10.63300/kijts01012016.01
Copyright and licence: © 2016 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர்,

தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம்,

திருச்சிராப்பள்ளி - 620 024, Email : alibavapkm@gmail.com

தமிழ் இலக்கிய மரபில் இராமாயணம் அறம், வீரம், ஆட்சிமுறை, குடும்ப உறவு, அரசியல் நெறி ஆகிய பல்வேறு வாழ்வியல் கூறுகளை உள்ளடக்கிய பெருங்காப்பியமாகத் திகழ்கிறது. இக்காப்பியத்தில் இடம்பெறும் விபீஷணன் பாத்திரம் அறத்தின் அடிப்படையில் தனது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் தனித்துவமான பாத்திரமாக விளங்குகிறது. கவி கா.மு. ஷெரீப் எழுதிய விபீஷணன் வெளியேற்றம் என்னும் நூல், கம்பராமாயணத்தின் மந்திரப்படலத்தை மையமாகக் கொண்டு விபீஷணனின் அறச்சிந்தனை, இராவணனின் ஆணவம், கும்பகர்ணனின் அறிவுரை, இந்திரஜித்தின் வீரப்பேச்சு ஆகியவற்றைத் திறனாய்வு நோக்கில் எடுத்துரைக்கிறது. குறிப்பாக, அரசனுக்கு உண்மையான ஆலோசனை வழங்குதல், தவறான ஆட்சி முடிவுகளை எதிர்த்தல், அறநெறியிலிருந்து விலகுவதால் ஏற்படும் அழிவு, உறவைக் காட்டிலும் அறத்திற்கு முக்கியத்துவம் அளித்தல் போன்ற கருத்துகள் இந்நூலில் விரிவாக விளக்கப்படுகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பராமாயணம் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. கம்பர் தமது காப்பியத்தில் கதை நிகழ்வுகளை மட்டுமல்லாமல் மனித இயல்புகள், அரசியல் சிக்கல்கள், அறநெறிகள், குடும்ப உறவுகளின் முரண்பாடுகள் ஆகியவற்றையும் நுட்பமாகப் பதிவு செய்துள்ளார். காப்பியத்தில் இடம்பெறும் ஒவ்வொரு பாத்திரமும் தனித்துவமான சிந்தனையையும் செயல்பாட்டையும் வெளிப்படுத்துகிறது.

கம்பராமாயணத்தின் மந்திரப்படலம் இராவணனின் அரசவையில் நடைபெறும் ஆலோசனைகளையும், அங்கு எழும் கருத்து வேறுபாடுகளையும் எடுத்துரைக்கிறது. குறிப்பாக, சீதையைச் சிறை வைத்திருப்பது தவறு என்றும், இராமனிடம் மன்னிப்புக் கோரி சீதையை ஒப்படைக்க வேண்டும் என்றும் விபீஷணன் வலியுறுத்துகிறான். ஆனால், இராவணன் அவனது அறிவுரையை ஏற்க மறுத்து அவனை அவையிலிருந்து வெளியேற்று கிறான்.

இந்நிகழ்வை மையமாகக் கொண்டு கவி கா.மு. ஷெரீப் விபீஷணன் வெளியேற்றம் என்னும் நூலைப் படைத்துள்ளார். இராமாயணம் மனித வாழ்க்கையின் அகம், புறம் ஆகிய இரண்டையும் எடுத்தியம்பும் இலக்கியம் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். இந்நூலின் என்னுரையில், "பாரதக் காப்பியத்திலுள்ள பீஷ்ம பாத்திரத்தை எடுத்து, அவர் தியாக வாழ்வை குறுங்காவியமாக ஆக்கியிருக்கிறேன். கம்பராமாயணத்தை பல கோணங்களில் ஆய்ந்து பற்பல கட்டுரைகள் வடித்துள்ளேன். அவை நான் நடத்திய 'ஒளி', 'தமிழ் முழக்கம்', 'சாட்டை' ஆகிய ஏடுகளில் கட்டுரைகளாக வெளிவந்துள்ளன. அந்த கட்டுரைகளுன் ஒன்றே, 'விபீஷணன் வெளியேற்றம்' என்பதாகும். 1956ஆம் ஆண்டுச் 'சாட்டை' ஏட்டில் தொடராகப் பத்து இதழ்களில் இந்த 'விபீஷணன் வெளியேற்றம்' வெளிவந்தது. என்னைக் 'கம்பர் கழகம்' இவ் ஆண்டு நடத்துகிற விழாவில் விருது வழங்கிக் கௌரவிப்பதை முன்னிட்டுக் கம்பராமாயணம் பற்றி நான் எழுதிய இந்த ஒரு பகுதியை மட்டும் நூலாக்கித் தந்திருக்கிறேன்" (விபீஷணன்

வெளியேற்றம், என்னுரை, ப.எ.இ.) என்று கவிஞர் நூலின் தோற்ற வரலாற்றுப் பின்புலத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

இந்நூலில் கவி கா.மு. ஷெரீபின் காப்பியப் புலமையும், பாத்திரங்களைச் சமூக மற்றும் அரசியல் நோக்கில் அணுகும் திறனும் வெளிப்படுகின்றன.

இராவணனின் அரசவையும் மாறுபட்ட கருத்துநிலைகளும்

இராவணனின் அரசவையில் இலங்கை மாநகரம் அனுமனால் தீக்கிரையாக்கப் பட்டதைத் தொடர்ந்து அரசியல் ஆலோசனை நடைபெறுகிறது. இச்சூழலில் மகோதரன், கும்பகர்ணன், இந்திரஜித்து, விபீஷணன் உள்ளிட்டோர் தங்களுடைய கருத்துகளை முன்வைக்கின்றனர்.

மகோதரன், பகைவர்களை உடனடியாக அழித்தொழிக்க வேண்டும் என்ற போர் மனப்பான்மையை வெளிப்படுத்துகிறான். அவனுடைய கருத்து வீரத்தை முன்னிறுத்துவதாக இருந்தாலும், பிரச்சனையின் அடிப்படைக் காரணத்தை ஆராய்வதாக அமையவில்லை. இதற்கு மாறாகக் கும்பகர்ணன் இராவணனின் செயலைக் கண்டிக்கிறான். சீதையைச் சிறை வைத்திருப்பது தவறு என்றும், அவளை இராமனிடம் ஒப்படைத்து மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் விபீஷணன் அறிவுறுத்துவதைக் கவிஞர், "சீதையை இராமரிடம் ஒப்புவிப்பது மட்டும் போதாது, இராமரிடம் நாம் மன்னிப்பும் கேட்டுக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் குலத்தாரோடு நாம் அழிவது திண்ணம்" (விபீஷணன் வெளியேற்றம், ப. 9) என்று எடுத்துரைக்கிறார்.

இந்தக் கருத்து விபீஷணனின் அறநெறி சார்ந்த அரசியல் அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது. தவறு நிகழ்ந்துவிட்ட பிறகு அதனை மறைப்பதோ, வன்முறையால் எதிர்கொள்வதோ சரியான தீர்வாகாது. தவறை உணர்ந்து அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதே உண்மையான அரசியல் அறிவாகும் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

கும்பகர்ணனின் அறவுரையும் விபீஷணனின் அறச்சிந்தனையும்

கும்பகர்ணனும் விபீஷணனும் இராவணனின் சகோதரர்கள். இருவருமே இராவணன் சீதையைக் கவர்ந்து வந்த செயலை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், அவர்களுடைய செயல்பாட்டு அணுகுமுறையில் வேறுபாடு காணப்படுகிறது.

கும்பகர்ணன் தவறை உணர்ந்தபோதும் அண்ணனுடன் இறுதிவரை இருந்து போரில் உயிரிழக்கிறான். விபீஷணனோ தவறான செயலில் தொடர்ந்து பங்கெடுக்க முடியாது என்று கருதி இராவணனை விட்டு வெளியேறுகிறான். இதனை விளக்கும் கவி கா.மு. ஷெரீப், "உலகம் பழிக்கும் வினையை மேற்கொண்ட இராவணனுடன் இருந்து தானும் பழியை ஏற்க ஒப்பாது வெளியேறினான் விபீஷணன்" (விபீஷணன் வெளியேற்றம், ப. 8) என்று குறிப்பிடு கிறார். இவ்வரிகள் விபீஷணனின் வெளியேற்றத்தை உறவுத் துறவாக மட்டும் கருதாமல், அறத்தின் அடிப்படையில்

மேற்கொள்ளப்பட்ட முடிவாகப் புரிந்துகொள்ள வழிவகுக்கின்றன. ஒருவர் தவறு செய்கிறார் என்பதற்காக அவருடன் உறவின் பெயரால் தொடர்ந்து இணைந்திருப்பது அறமாகாது. தவறைச் சுட்டிக்காட்டுவதும், அதனைத் திருத்த முயல்வதும், திருத்த இயலாத சூழலில் அதிலிருந்து விலகுவதும் அறநெறியின் வெளிப்பாடுகளாகும் என்பதை விபீஷணன் பாத்திரம் உணத்துவதைக் கவிஞர் இந்நூலில் காட்டுகிறார்.

இந்திரஜித்தின் வீரமும் விபீஷணனின் அறிவுரையும்

இராவணனின் அரசவையில் இந்திரஜித்து வீரப்பெருமிதத்துடன் பேசுகிறான். இராமலட்சுமணர்களைத் தனியாகவே எதிர்கொண்டு அழித்துவிடுவதாகக் கூறுகிறான். அவனுடைய பேச்சில் வீரமும் ஆவேசமும் நிறைந்திருந்தாலும், எதிரியின் வலிமையையும் எதிர்கால விளைவுகளையும் ஆராயும் நிதானம் காணப்படவில்லை.

இதனை எதிர்த்துப் பேசும் விபீஷணன், அரசவையில் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்கள் இருக்கும்போது இளைஞனான இந்திரஜித்து அளவுக்கு மீறிப் பேசுவது பொருத்தமற்றது என்று சுட்டிக்காட்டுகிறான்.

அறத்திற்கும் வலிமைக்கும் உள்ள தொடர்பை விளக்குவதற்காக,

“அறத்திற்கே அன்புசார் பென்பர் அறியார்

மறத்திற்கும் அஃதே துணை”

எனும் திருக்குறளையும் விபிஷணன் மேற்கோள் காட்டுவதாகக் கவிஞர் தம் நூலில் படைத்துக் காட்டுகிறார் (விபீஷணன் வெளியேற்றம், ப. 17).

இந்தக் குறளின் வழியாக அன்பும் அறமும் அறச்செயல்களுக்கு மட்டுமல்லாமல் வீரத்திற்கும் துணையாக அமைகின்றன என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. வீரம் என்பது வெறும் உடல் வலிமையோ போரிடும் திறனோ அன்று. நன்மை எது, தீமை எது என்பதை உணர்ந்து செயல்படுவதும் உண்மையான வீரத்தின் கூறாகும் என்பதை விபீஷணனின் உரை எடுத்துரைக்கிறது என்பதைம் கவிஞர் புலப்படுத்துகிறார்.

சீதையின் கற்பும் இலங்கையின் அழிவும்

கவி கா.மு. ஷெரீபின் முக்கியமான திறனாய்வுப் பகுதியாக அமைவது சீதையின் கற்பையும் இலங்கையின் அழிவையும் தொடர்புபடுத்தும் விளக்கமாகும். இலங்கை மாநகரம் அனுமனால் தீக்கிரையாக்கப்பட்டதற்குக் குரங்கின் வலிமையை மட்டும் காரணமாகக் கருதாமல், சீதையின் கற்பு ஆற்றலையும் அதன் பின்னணியில் காண வேண்டும் என்று விபீஷணன் இராவணனுக்கு எடுத்துரைக்கிறான். இதனை,

“கோநகர் முழுவதும் நினது கொற்றமும்

சானகி யெனும்பெயர் உலகின் றம்மனை

யானவள் கற்பினால் வெந்த தல்லதுஓர்

வானரஞ் சுட்டதென் றுணர்தல் மாட்சியோ”

எனும் கம்பரின் பாடல் வாயிலாகக் கவிஞர் எடுத்து மொழிகிறார் (விபீஷணன் வெளியேற்றம், ப. 21).

இப்பாடல் இலங்கையின் அழிவுக்கான அடிப்படைக் காரணத்தை ஆராய்கிறது. வெளிப்படையாகப் பார்த்தால் அனுமன் இலங்கையைத் தீயிட்டுச் சென்றிருக்கிறான். ஆனால், அந்த நிகழ்வின் பின்னணியில் இராவணனின் அறமற்ற செயலும் சீதையின் கற்பும் இடம்பெறுகின்றன. இதனைத் தமது உரைநடையில், "சீதையென்னும் உலக மாதாவின் கற்புத் தீயேயொழிய ஒரு சிறு குரங்கு கொழுவிய சினத் தீயல்ல" என்று கவிஞர் விளக்குகிறார்.

இவ் விளக்கம் கவி கா.மு. ஷெரீப் அவர்களின் இலக்கியப் பார்வையில் காணப்படும் தனித்தன்மையை வெளிப்படுத்துகிறது. ஒரு நிகழ்வின் வெளிப்புறத் தோற்றத்தை மட்டும் ஆராயாமல் அதன் உள்ளார்ந்த காரணத்தை ஆராயும் அவரின் திறனாய்வு அணுகுமுறையும் இங்கு வெளிப்படுகிறது.

இராவணனின் ஆணவமும் அறிவுரையை மறுக்கும் மனப்பான்மையும்

'விபீஷணன் இராவணனுக்கு அறிவுரை வழங்கும்போது அவனுடைய கடந்தகால வெற்றிகளையும், பெற்ற வரங்களையும், வலிமையையும் நினைவுபடுத்துகிறான். ஆனால், கடந்தகால வெற்றிகள் எதிர்கால வெற்றிகளுக்கு உத்தரவாதமாக அமையாது என்பதை இராவணன் உணர மறுக்கிறான். இராவணன் தன்னுடைய வலிமையின் மீது அளவற்ற நம்பிக்கை கொண்டிருக்கிறான். தன்னை வெல்ல யாராலும் முடியாது என்ற எண்ணம் அவனிடம் மேலோங்குகிறது. இராவணனின் இம்மனநிலைக்கு எதிராக விபீஷணன் பல வரலாற்று நிகழ்வுகளையும் எடுத்துக்காட்டுகிறான். கார்த்தவீரியார்ச்சுனனிடம் இராவணன் தோல்வியுற்றதையும், வாலியிடம் ஏற்பட்ட அனுபவத்தையும் நினைவூட்டுகிறான்' என்பனவற்றையெல்லாம் கவிஞர் தம் நூலில் ஆங்காங்கே சுட்டிக் காட்டுகிறார் (விபீஷணன் வெளியேற்றம், பக். 23 - 24).

இதன் மூலம் ஒருவருடைய கடந்தகாலப் பெருமை அவரை நிகழ்கால உண்மை யிலிருந்து விலக்கிவிடக்கூடாது என்ற அரசியல் கருத்துக் கவிஞரால் வலியுறுத்தப்படுவது புலப்படுகிறது.

அறமற்ற செயலால் ஏற்படும் அழிவை முன்கூட்டியே உணர்த்துதல்

விபீஷணன் இராவணனிடம் சீதையைச் சிறை வைத்திருப்பதால் ஏற்படும் ஆபத்துகளை எடுத்துரைக்கிறான். தேவர்கள் அச்சமின்றி நடமாடத் தொடங்கியிருப்பதையும், இலங்கை அரக்கர்கள் அச்சத்துடன் வாழ்வதையும் அவன் எடுத்துக்காட்டுகிறான் என்பதைக் கவிஞர்,

"இசையுஞ் செல்வமு முயர்குலத் தியற்கையு மெஞ்ச

வசையுங் கீழ்மையும் மீக்கொளக் கிளையொடு மடியாது

அசைவில் கற்பினவ் வணங்கைவிட் டருளுதி யதன்மேல்

விசைய மில்லெனச் சொல்லின னறிஞரின் மிக்கான்”

எனும் கம்பராமாயணப் பாடல் வாயிலாக நூலில் சுட்டிக் காட்டுகிறார் (விபீஷணன் வெளியேற்றம், ப.26).

இப்பாடல் புகழ், செல்வம், குலப்பெருமை ஆகியவை நிலைத்திருக்க வேண்டுமெனில் அறநெறியைப் பின்பற்ற வேண்டும் என்பதை உணர்த்துகிறது. குறிப்பாக, அரசனின் தனிப்பட்ட தவறு அவனுடைய குடும்பத்தையும் நாட்டையும் பாதிக்கக்கூடும் என்ற அரசியல் உண்மையை விபீஷணன் எடுத்துரைக்கிறான் என்பதையும் கவிஞர் இந்நூலில் காட்டுகிறார்.

கவி கா.மு. ஷெரீப் விபீஷணனை ஒரு சாதாரண சகோதரனாக மட்டும் சித்திரிக்கவில்லை. நாட்டின் எதிர்காலத்தையும் குடிமக்களின் நலனையும் சிந்திக்கும் அரசியல் அறிவுடையவனாகவும் காட்டுகிறார்.

இராவணனின் மறுப்பு: அதிகார ஆணவத்தின் வெளிப்பாடு

விபீஷணன் பலமுறை அறிவுரை கூறியபோதும் இராவணன் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, அவனுடைய கருத்துகளைத் தவறாகப் புரிந்துகொண்டு, விபீஷணன் இராமனுக்கு ஆதரவாகச் செயல்படுகிறான் என்று குற்றம் சாட்டுகிறான்.

இராவணனின் மனநிலையைக் கவிஞர், “தம்பி தனக்கு நல்லதே சொல்கிறான் என்று நம்பவில்லை. ஏதோ சூதுமதி படைத்தே கூறுகின்றனன் என்று சினம் கொண்டான்” (விபீஷணன் வெளியேற்றம், ப. 35) என்று விளக்குகிறார்.

இவ்வரிகள் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு உண்மையை எடுத்துரைப்பவர்களை எதிரிகளாகக் கருதும் மனப்பான்மை இருக்கும் என்பதை வெளிப்படுத்துகின்றன.

அரசவையில் கருத்துச் சுதந்திரம் இருக்க வேண்டும். மாறுபட்ட கருத்துகளைக் கேட்டு ஆராய்ந்து முடிவெடுப்பதே நல்லாட்சியின் அடையாளமாகும். ஆனால், இராவணன் தனக்குப் பிடித்த கருத்துகளை மட்டுமே ஏற்கிறான். அவனது ஆணவம் அறிவுரையை ஏற்கும் திறனை அழிக்கிறது.

இவ்வகையில் இராவணனின் வீழ்ச்சி போர்க்களத்தில் தொடங்குவதற்கு முன்பே அவனது சிந்தனையில் தொடங்கிவிடுகிறது என்பதைக் கவிஞரின் இந்நூல் உணர்த்துகிறது.

விபீஷணனைத் துரோகியாகச் சித்திரிக்கும் இராவணன்

விபீஷணன் இராமனின் வலிமையையும், அறநெறியையும் எடுத்துரைப்பதை இராவணன் பொறுத்துக் கொள்ளவில்லை. விபீஷணன் மீது அரசாட்சியைக் கைப்பற்றும் ஆசை இருப்பதாக,

“நண்ணின மனிதர்பால் நண்பு பூண்டனை

எண்ணினை செய்வினை என்னை வெல்லுமாறு

உன்னினை யரசின்மே லாசை யூன்றினை

திண்ணிதுன் செயல்பிறர் செறுநர் வேண்டுமோ?"

எனும் பாடலின் வாயிலாக இராவணன் விபீஷணன் மீது குற்றம் சாட்டுவதைக் கவிஞர் மேற்காணும் பாடலின் வாயிலாக எடுத்துக் காட்டுகிறார் (விபீஷணன் வெளியேற்றம், ப. 38).

இந்தப் பாடலில் விபீஷணனின் உண்மையான நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியாத இராவணனின் மனநிலை வெளிப்படுகிறது. விபீஷணன் நாட்டின் அழிவைத் தவிர்க்க விரும்புகிறான். ஆனால், இராவணன் அதனை அரசியல் சூழ்ச்சியாகப் பார்க்கிறான். 'அதிகாரம் ஒருவருடைய சிந்தனையை ஆக்கிரமித்துவிட்டால் உண்மையான அன்பையும் அறிவுரையையும் கூட அவர் தவறாகப் புரிந்துகொள்வார்' என்பதே இங்குக் கவி கா.மு. ஷெரீப் எடுத்துரைக்கும் முக்கியமான கருத்தாக இருக்கிறது.

அறத்தின் பக்கம் நிற்கும் விபீஷணனின் உறுதியான முடிவு

விபீஷணன் இறுதிவரை இராவணனைத் திருத்த முயற்சி செய்கிறான். அவன் தனது சகோதரனின் அழிவை விரும்பவில்லை. இராவணனின் நன்மைக்காகவே தொடர்ந்து அறிவுரைகளை வழங்குகிறான். ஆனால், இராவணன் அவனை வெளியேறுமாறு கட்டளையிடுகிறான். அதற்கு எடுத்துக்காட்டாகக் கம்பராமாயணத்தில் விபீஷணன் கூறுவதாகக் கம்பர் படைத்துள்ள,

"பழியினை யுணர்ந்தியான் படுக்கி லேனுனை

யொழிகிலை புகலுத லொல்லை நீங்குதி

விழியெதிர் நிற்றியேல் விளிதி யென்றனன்

அழிவினை யெய்துவா னறிவு நீங்கினான்"

எனும் கம்பராமாயணப் பாடலைக் கவிஞர் எடுத்துரைக்கிறார் (விபீஷணன் வெளியேற்றம், ப. 39). இப்பாடல் இராவணனின் இறுதிக்கட்ட ஆணவத்தையும், விபீஷணனை வெளியேற்றும் முடிவையும் எடுத்துரைக்கிறது என்கிறார் கவிஞர். இச்சூழலில் விபீஷணன் இராவணனிடம் பகைமை காட்டவில்லை. மாறாக, இறுதியாக நல்லுரையும் கூறுகிறான் என்பதைக் கவி கா.மு. ஷெரீப் "அறம் பிழைத்தோர்க்கு நல்வாழ்வு சித்திப்பதில்லை"(விபீஷணன் வெளியேற்றம், ப. 40) என்று குறிப்பிடுகிறார்.

இவ்வுரை இந்நூலின் அறவியல் அடிப்படையைத் தெளிவுபடுத்துகிறது. அறத்தை மீறி வாழ்வில் உயர்வு பெறலாம் என்று நினைப்பது தவறான எண்ணமாகும். அறநெறியைப் புறக்கணிப்பது தனிமனிதனின் அழிவை மட்டுமல்லாமல் அவனைச்

சார்ந்த சமூகத்தின் அழிவையும் ஏற்படுத்தும் எனும் சிந்தனையைத் தம் கட்டுரையில் கவிஞர் சுட்டுகிறார்.

விபீஷணனின் வெளியேற்றம்: உறவைவிட அறமே உயர்ந்தது

விபீஷணன் இராவணனை விட்டு வெளியேறுவது இந்நூலின் மைய நிகழ்வாகும். தனது சகோதரனிடம் உள்ள அன்பையும், குடும்ப உறவையும் மறக்காமல் அவனுக்கு அறிவுரை வழங்கிய விபீஷணன், இறுதியில் அறத்திற்கு முரணான அரசியல் செயல்பாட்டில் தொடர்ந்து இருக்க முடியாது என்று முடிவெடுக்கிறான் என்பதைக் கவிஞர்,

“எத்துணை வகையினு முறுதி யெய்தின

ஒத்தன வுணர்த்தினே னுணர கிற்றிலை

அத்தவென் பிழைபொறுத் தருளு வாயென

உத்தம னந்நக ரொழியப் போயினான்.”

எனும் கம்ப காவியப் பாடல் வாயிலாகக் காட்டுகிறார் (விபீஷணன் வெளியேற்றம், ப. 40). இந்தப் பாடல் விபீஷணனின் மனப்பக்குவத்தையும், இறுதிவரை அறிவுரை கூறிய அவனுடைய பண்பையும் வெளிப்படுத்துகிறது எனக் கவிஞர் எண்ணுகிறார். குறிப்பாக, அவன் இராவணனைப் பணிந்து விடைபெறுவது அவனுடைய பண்பாட்டையும் குடும்ப உறவின் மீதான மதிப்பையும் காட்டுகிறது. ஆனால், அவன் இராவணனின் தவறான செயலுக்கு உடன்படவில்லை. எனவே, விபீஷணனின் வெளியேற்றம் துரோகமாக மட்டும் பார்க்கப்பட வேண்டியதல்ல. அறத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட கடினமான முடிவாகவும் ஆராயப்பட வேண்டும் என்பதும் கவிஞரின் கருத்தாக இருக்கிறது.

கும்பகர்ணனின் இறுதிக் கருத்தும் கவி கா.மு. ஷெரீபின் தனித் திறனாய்வும்

விபீஷணன் வெளியேறிய பின்னர் கும்பகர்ணனின் நிலைப்பாட்டை கவிஞர் மீண்டும் ஆராய்கிறார். கும்பகர்ணன் விபீஷணனின் செயலை ஆதரிப்பதாகக் கம்பர் கூறும் இடத்தையும், விபீஷணன் இராமனைச் சார்ந்து செல்ல வேண்டும் என்று அவன் வேண்டிக்கொள்வதையும் ஒப்பிட்டு ஒரு முக்கியமான கேள்வியினை, “அவ்வாறாயின், கும்பகர்ணனுக்கிருந்த துயரம் என்ன? சாகத்துணிந்து போர்க்களம் புகுந்துள்ளவனுக்குத் துயரம் ஒன்றிருந்ததென்றால் அது யாது...?” என்று எழுப்புகிறார் (விபீஷணன் வெளியேற்றம், ப. 41). இக்கேள்வி கவிஞரின் திறனாய்வு அணுகுமுறைக்குச் சிறந்த சான்றாக அமைகிறது.

கம்பரின் பாடலை அப்படியே ஏற்றுக்கொள்வதோடு நின்றுவிடாமல், அதிலுள்ள பாத்திர உளவியலையும் கருத்து முரண்பாட்டையும் ஆராய்வது கவிஞருடைய

தனிச்சிறப்பாகும். ஒரு படைப்பில் இடம்பெறும் சிறிய உரையாடல்கூட ஆழமான பொருளைக் கொண்டிருக்க முடியும் என்பதை இவ்வினா உணர்த்துகிறது.

கவி கா.மு. ஷெரீபின் உரைநடைத் திறனாய்வு நுட்பங்கள்

இந்நூலை ஆராயும்போது கவி கா.மு. ஷெரீபின் திறனாய்வு அணுகுமுறையில்,

1. பாடலும் உரைநடையும் இணைந்த விளக்கம்: கம்பரின் பாடல்களை மேற்கோளாகக் கொடுத்து அவற்றின் பொருளை எளிய உரைநடையில் விளக்குதல்; இதனால் வாசகர்கள் பாடலின் உள்ளார்ந்த பொருளை எளிதில் புரிந்துகொள்ள முடிதல்,

2. பாத்திர உளவியல் ஆய்வு: இராவணன், விபீஷணன், கும்பகர்ணன்,

இந்திரஜித்து ஆகியோரின் மனநிலைகளை ஒப்பிட்டு ஆராய்தல்;

குறிப்பாக, விபீஷணனின் அறச்சிந்தனையையும் இராவணனின்

ஆணவத்தையும் எதிர்நிலைகளாக எடுத்துக்காட்டுதல்,

3. அரசியல் நோக்கிலான அணுகுமுறை: அரசன் தனக்கு வழங்கப்படும்

அறிவுரைகளைக் கேட்க வேண்டும்; அமைச்சர்களின் கருத்துகளைக்

கவனிக்க வேண்டும்; நாட்டின் எதிர்காலத்தை முன்னிறுத்தி முடிவெடுக்க

வேண்டும் என்ற அரசியல் நெறிகளை வெளிப்படுத்துதல்,

4. வரலாற்று நிகழ்வுகளின் ஒப்பீடு: இராவணனின் கடந்தகால

நிகழ்வுகளையும், இரணியன் மற்றும் பிரகலாதன் தொடர்பான

நிகழ்வுகளையும் எடுத்துக்காட்டி விபீஷணனின் அறிவுரைக்கு வலிமை

சேர்த்தல் (விபீஷணன் வெளியேற்றம், பக். 23 - 35),

5. வினா எழுப்பும் திறனாய்வு: கும்பகர்ணனின் துயரத்தைப் பற்றிய கேள்வி

போன்ற இடங்களில் ஆசிரியர் நேரடியாக ஒரு முடிவைத் திணிக்காமல்

வாசகரையும் சிந்திக்கத் தூண்டுதல்

எனும் தனித்துவமான கூறுகளைக் காணமுடிகிறது.

இன்றைய சமூகத்திற்கான வாழ்வியல் செய்திகள்

விபீஷணன் வெளியேற்றம் என்னும் நூல் காப்பிய நிகழ்வை மட்டும் விளக்கவில்லை. இன்றைய சமூகத்திற்கும் பொருந்தக்கூடிய,

1. அறநெறி: அதிகாரம், செல்வம், புகழ் ஆகியவற்றைவிட அறமே உயர்ந்தது.

2. நல்லாட்சி: ஆட்சியாளர்கள் தங்களைச் சுற்றியுள்ளவர்களின் அறிவுரைகளைக் கேட்கவேண்டும்.

3. கருத்துச் சுதந்திரம்: மாறுபட்ட கருத்துகளைப் பகைமையாகக் கருதக்கூடாது.
4. பெண்ணின் மாண்பு: பிறருடைய உரிமையையும் கண்ணியத்தையும் மதிக்க வேண்டும்.
5. உறவின் உண்மைத் தன்மை: உறவினரின் தவறை ஆதரிப்பது உண்மையான அன்பாகாது.
6. தொலைநோக்குச் சிந்தனை: எதிர்கால விளைவுகளை ஆராய்ந்து முடிவெடுப்பதே அறிவுடைமையாகும்.

எனும் பல வாழ்வியல் கருத்துகளை முன்வைக்கிறது. இவற்றின் மூலம் கவி கா.மு. ஷெரீபின் காப்பிய நிகழ்வைச் சமகாலச் சமூகத்துடன் தொடர்புபடுத்தும் திறன் வெளிப்படுகிறது.

கவி கா.மு. ஷெரீபின் விபீஷணன் வெளியேற்றம் என்னும் நூல் கம்பராமாயணத்தின் மந்திரப்படலத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சிறந்த இலக்கியத் திறனாய்வு முயற்சியாகும். இந்நூலில் விபீஷணன் வெறும் இராவணனின் தம்பியாக மட்டும் சித்திரிக்கப்படவில்லை. அறநெறியை முன்னிறுத்தும் அறிவாளியாகவும், அரசியல் தொலைநோக்குடையவனாகவும், தவறான ஆட்சிமுடிவுகளை எதிர்க்கும் சிந்தனையாளராகவும் வெளிப்படுத்தப்படுகிறான். இராவணன் அதிகார ஆணவத்தினால் நல்லுரைகளைப் புறக்கணித்து அழிவை நோக்கிச் செல்கிறான். கும்பகர்ணன் தவறை உணர்ந்தும் சகோதர உறவின் காரணமாக இராவணனுடன் இருக்கிறான். விபீஷணனோ அறத்திற்காகத் தனது உறவையும் அரசவையையும் துறந்து வெளியேறுகிறான்.

இந்த மூன்று பாத்திரங்களின் வழியாக மனித வாழ்க்கையின் வெவ்வேறு அறநெறி நிலைப்பாடுகளைக் கவிஞர் இந்நூலில் விளக்குகிறார். குறிப்பாக, கம்பரின் பாடல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் உள்ளார்ந்த பொருளை எளிய உரைநடையில் விளக்கும் கவி கா. மு. ஷெரீபின் திறனாய்வு நுட்பம் பாராட்டத்தக்கது. பாடல்களின் சொற்பொருளை மட்டும் விளக்காமல் அவற்றின் அரசியல், அறவியல், உளவியல் பரிமாணங்களையும் ஆராய்ந்துள்ளார். எனவே, 'விபீஷணன் வெளியேற்றம்' எனும் நூல் இராமாயணக் கதையின் ஒரு நிகழ்வை விளக்கும் நூலாக மட்டுமல்லாமல், அறத்திற்கும் அதிகாரத்திற்கும் இடையே நிகழும் போராட்டத்தை எடுத்துரைக்கும் சிந்தனைக்குரிய நூலாகவும் விளங்குகிறது. உறவைவிட அறமும், அதிகாரத்தைவிட நீதியும், ஆணவத்தைவிட அறிவும் உயர்ந்தவை என்ற வாழ்வியல் உண்மையையும் இந்நூல் வலியுறுத்துகிறது.

துணைநூல்

References

ஷெரீப், கவி கா.மு. விபீஷணன் வெளியேற்றம், தமிழ்முழக்கம் பதிப்பகம், 21 பச்சையப்பச் செட்டித் தெரு, எல்லிஸ் ரோடு, சென்னை - 600 002, முதற் பதிப்பு : ஆகஸ்ட் 1991.